ஆர்.டி.சேகர் தலைமை! மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர்

பெரம்பூர் த.ஆறுமுகம் இல்ல மணவிழா வரவேற்பு! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, அக். 24 – மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர் – பெரம்பூர் 44வது வட்டக் கழகச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் – ஆ.இராஜலட்சுமி ஆகியோரின் புதல்வி ஆ.தமிழ் பொன்னிக்கும் சென்னை கோடம்பாக்கம் வி.குமார் – கே.ரமாதேவி ஆகியோரின் புதல்வர் கே.விக்னேஷ்க்கும் மணவிழா நாளை (25.10.2026 ஞாயிறு) காலை 9 மணியளவில் மூலக்கடை ஜங்ஷனில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று (24.10.2026 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் மூலக்கடை ஜங்ஷனில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழா வரவேற்புக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் தலைமை வகிக்கிறார்.

கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம், தா.இளைய அருணா, பி.டி.சி.ஜி.செல்வராஜ், பி.டி.சி.வெ.பாலு, க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், டி.கமலக்கண்ணன், அ.தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன், வி.அமுலு, நா.சேகர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கே.என்.நேரு எம்.எல்.ஏ., ஆ.இராசா எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., தா.மோ.அன்பரசன், சா.சி.சிவசங்கர், ஆவடி சா.மு.நாசர், கோவி செழியன் எம்.எல்.ஏ., இரா.கிரிராஜன் எம்.பி., எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, நே.சிற்றரசு, மயிலை த.வேலு, கனிமொழி என்.வி.என்.சோமு, புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா, ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால், ப.ரங்கநாதன், ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, இ.பரந்தாமன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஜோசப் சாமுவேல், கே.பி.சங்கர், மேயர் பிரியா, துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் இவ்விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

த.வெ.க. அரசின் அவலங்களை மறைக்க 'ரீல்ஸ்' மட்டுமே போதாது!

மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஆட்சியை நடத்த வேண்டும்!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேட்டி!

தூத்துக்குடி, அக். 24- சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பின்மை, போதைப்பொருள் புழக்கம், விலைவாசி உயர்வு என அனைத்திலும் தோல்வியடைந்த தவெக அரசின் அவலங்களை மறைக்க ரீல்ஸ் மட்டுமே போதாது. மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான ஆட்சியை நடத்த வேண்டும் என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி ஆவேசத்துடன் குறிப்பிட்டார்.



தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் கூறியதாவது:-

த.வெ.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, தினமும் பல்வேறு கொலைக் குற்றச் சம்பவங்கள், பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் எனத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தினமும் இதைப் பற்றிப் பேசி எங்களுக்கே மனவேதனை ஏற்படும் அளவுக்கு, தொடர்ந்து இதுகுறித்து ட்வீட் செய்தும் பேசியும் வருகிறோம்.

ஆனால், அரசுப் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரையும் இத்தகைய சம்பவங்கள் பாதிப்பதாகத் தெரியவில்லை. இது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இவர்கள் என்ன ஆட்சி நடத்துகிறார்கள் என்பதே எனக்குப் புரியவில்லை. சட்டம் ஒழுங்கைக்கூடச் சீர்செய்ய முடியாத அளவுக்குத் திறமையின்றி, இன்று ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் பெரிய வாக்குறுதிகளையும் வசனங்களையும் பேசி ஆட்சிக்கு வந்தார்கள். அனைவருக்கும் நான் பாதுகாப்பாக இருப்பேன் என்று முதலமைச்சர் கூறினார். ஆனால், இன்று யாருக்குமே பாதுகாப்பு இல்லாத நிலை தமிழ்நாட்டில் உருவாகியுள்ளது. இது எங்கு போய் முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

ஏனென்றால், ஒவ்வொரு சம்பவமும் வெளியில் வரும்போது கேள்விகள் அதிகமாக எழுகின்றன. அதனால், எல்லாவற்றையும் மூடி மறைத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். செஞ்சியில் ஒரு குழந்தை காணாமல் போய் எத்தனை நாட்களாகின்றது. ஆனால் இன்னும் காவல்துறை என்ன செய்து கொண்டிருக்கிறது. அந்தக் குழந்தைக்கு என்ன ஆனது என்பது கூட யாருக்கும் தெரியவில்லை.

இது ஆட்சியா; அலங்கோலமா?

இப்படித்தான் இன்று அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சருக்கு மக்கள் மீது அக்கறை இருக்கிறதா, இல்லையா என்பதுகூடத் தெரியவில்லை. ஏனென்றால், இது நேரடியாக முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் வரக்கூடிய துறை காவல் துறை. ஆனால், இத்தனை குற்றச் சம்பவங்கள் தினமும் நடைபெறுகின்றன. ஒரு நாளைக்கு ஒரு குற்றச் சம்பவம் என்றுகூட இல்லை. ஒரு நாளில் எத்தனை குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. சில நேரங்களில், 24 மணி நேரத்திற்குள் 10 கொலைகள் மற்றும் பல்வேறு குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

ஆனால், இதுகுறித்து எந்தக் கவலையும் இல்லாமல், இந்த ஆட்சியில் இருப்பவர்கள் வீர வசனங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்களைக் குறை சொல்வதை மட்டுமே தங்களுடைய பணியாக வைத்திருக்கிறார்களே தவிர, தங்களுடைய பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கிறார்கள். தங்களுடைய பொறுப்பு என்ன என்பதைக்கூட உணராமல் செயல்படக்கூடிய ஓர் ஆட்சிதான் இன்று நடைபெற்று வருகிறது.

இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு என்னென்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்களோ, அவை அனைத்தும் பொய்யாகியுள்ளன. இங்கு ரீல்ஸ் கவர்மெண்ட்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரீல்ஸில் மட்டுமே ஆட்சி நடத்திவிடலாம் என்று நினைக்கிறார்களே தவிர, அவர்கள் கொடுத்த எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றுவதில்லை.

இன்று விலைவாசி உயர்ந்துள்ளது, குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. போதைப்பொருட்கள் அவர்களுடைய கட்சி நிர்வாகிகளின் வீடுகளிலிருந்தே கைப்பற்றப்படுகின்றன. இன்று போதைப்பொருள் பிரச்சினை என்பது நமது சமூகத்தில் மிகப்பெரிய பிரச்சினையாக மாறிக்கொண்டிருக்கிறது.

யாருக்குமே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. மின்வெட்டு அந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது; மின்சாரமே இல்லை. விவசாயிகள் ஒருபுறம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மதுப்பழக்கத்தைக் குறைப்போம், மது அருந்துவதைக் குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்கள். அதையும் செய்யவில்லை. அதனால் ஏற்படக்கூடிய குற்றங்களையும் கட்டுப்படுத்துவதில்லை. இது ஆட்சியா, அலங்கோலமா என்றே தெரியவில்லை.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

டம்மி த.வெ.க. ஆட்சியில்

பச்சை குழந்தைகளுக்கும் பாதுகாப்பில்லை!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக்.24- செஞ்சியில் 7 வயது சிறுமி காணாமல் போய் 11 நாட்கள் ஆகிவிட்டன. இராணிப்பேட்டையில் ஒருமாதமாக காணாமல் போன குழந்தை ஒன்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், டம்மி த.வெ.க. ஆட்சியில் பச்சை குழந்தைகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லை என்று, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



அவரது பதிவு வருமாறு:-

செஞ்சி அருகே 7 வயது சிறுமி காணாமல் போய் இன்றோடு 11 நாட்கள் ஆகியும், அச்சிறுமியை கண்டுபிடிக்க முடியாமல் இந்த அரசு திணறிக்கொண்டு இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

குழந்தையைக் கண்டுபிடிக்காத அரசையும் காவல்துறையையும் கண்டித்து தி.மு.கழகம் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன் தலைமையில் செஞ்சி ஆலம்பூண்டியில் நேற்று (22.10.2026) கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டையில் கூட இதே போல ஒரு குழந்தை காணாமல் போய் சுமார் ஒரு மாதம் ஆகியும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.

இந்த டம்மி ஆட்சியில் பச்சை குழந்தைகளுக்கு கூட பாதுகாப்பில்லை என்ற நிலையில் தான் தமிழ்நாடு இருக்கிறது.

முதலமைச்சர் தன் Reels மோகத்தைத் தள்ளி வைத்துவிட்டு, பிள்ளையை தொலைத்துத் தவிக்கும் அந்தக்குடும்பத்தின் வலியை உணர்ந்து, காணாமல் போன குழந்தையை உடனே கண்டறிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

புதிய தலைமைச் செயலகம் – இடத்தை தேர்வு செய்தது யார்?

தமிழ்நாட்டின் முதலமைச்சர் விஜய்யா? இல்லை ஜோதிடரா?

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, அக்.24- கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

புதிய தலைமைச் செயலகத்திற்கு பட்டினப்பாக்கத்தில் இடம் தேர்வு செய்ததற்கான ஆய்வு விவரங்கள் தங்களிடம் இல்லை என்று RTI மூலம் எழுப்பிய கேள்விக்கு த.வெ.க. அரசு பதிலளித்திருக்கிறது.

அப்படியென்றால், இடத்தைத் தேர்வு செய்தது யார்? முதலமைச்சர் @TVKVijayHQ அவர்களா? இல்லை ஜோதிடரா? தமிழ்நாட்டில் நடப்பது மக்கள் ஆட்சியா, ஜோதிடர் ஆட்சியா?.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நீளம் தாண்டுதலில் சாதனை படைத்து

தங்கம் வென்ற சோலைராஜ் தர்மராஜுக்கு வாழ்த்து!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!





சென்னை,அக்.24- நீளம் தாண்டுதலில் சாதனை படைத்து தங்கப்பதக்கம் வென்ற சோலைராஜ் தர்மராஜுக்கு வாழ்த்து தெரிவித்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அப்பதிவு வருமாறு:

ஜப்பானில் நடைபெற்ற 5-வது ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் (Asian Para Games), ஆண்களுக்கான நீளம் தாண்டுதல் (T44/T62/T64) பிரிவில், 7.15 மீட்டர் தூரம் தாண்டி புதிய ஆசிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்ற சோலைராஜ் தர்மராஜுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

கடந்த #AsianParaGames2022 போட்டியில் அவர் 6.80 மீட்டர் தூரம் தாண்டி சாதனை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது இந்தச் சிறப்பான சாதனையைப் பாராட்டி, நமது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அவருக்குத் தேவையான பல்வேறு நிதி உதவிகளை வழங்கியது.

தற்போது, அவர் தனது முந்தைய சாதனையைத் தானே முறியடித்து, புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்து பல சாதனைகளைப் படைத்து, நமது நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் மேலும் பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

புதிய தலைமைச் செயலகம் - ஆர்.டி.ஐ. பதிலால் அதிர்ச்சி!

சென்னை,அக்.24- புதிய தலைமைச் செயலகம் கட்ட பட்டினப்பாக்கம் தேர்வானது குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் எழுப்பிய கேள்விக்கு எந்த ஆதாரமும் தங்களிடம் இல்லை என பொதுத்துறை தெரிவித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள தலைமைச் செயலகத்தில் இடநெருக்கடி காரணமாக, புதிய ஒருங்கிணைந்த தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்ற வளாகம் கட்டப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்திருந்தார்.

சென்னை பட்டினப்பாக்கத்தில் ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில், 15 மாடிகளுடன் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் தலைமைச் செயலகக் கட்டிடம் அமைப்பதற்காக சுமார் 26 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. இதற்காக அரசாணையும் வெளியிடப்பட்டது.

இந்த திட்டத்திற்கு அப்பகுதி மீனவர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், கடற்கரை ஒழுங்கு முறை மண்டல பகுதியில் பிரமாண்ட கட்டிடங்களை கட்டுவது இயற்கைக்கே ஆபத்தானது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், மிகப் பெரிய தலைமைச் செயலகம் அமைக்க முடிவெடுக்கப்பட்டதன் பின்னணி குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்ப் பொதுத்துறைக்கு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை ஆய்வு செய்த பொதுத்துறை, மனுதாரருக்கு எழுத்துப்பூர்வமாகப் பதிலளித்துள்ளது. அதில், புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்காக பட்டினப்பாக்கம் பகுதி எவ்வாறு தேர்வு செய்யப்பட்டது என்பதற்கான எந்த தகவலும் பொதுத்துறையிடம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், அந்த இடத்தை முடிவு செய்வதற்கு ஏதேனும் ஆய்வுகள் நடத்தப்பட்டதா அல்லது அதற்காகப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் என்ன என்பது குறித்த ஆவணங்களும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்த பரிசீலனையின் போது வேறு இடங்கள் எவையேனும் பரிசீலிக்கப்பட்டதா என்பது தொடர்பான ஆவணங்களும் பொதுத் துறையிடம் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. துறை சார்ந்த ஆவணங்களே இல்லாமல் அரசாணை எவ்வாறு வெளியிடப்பட்டது என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



கடந்த ஆண்டு 'பசுமை தூத்துக்குடி' சார்பில் கங்கா பரமேஸ்வரி நகர் பகுதியில் நடப்பட்ட சுமார் 800 மரக்கன்றுகளின் வளர்ச்சியை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பார்வையிட்டார். இதில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் இருந்தனர்.

புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை: தஞ்சை கவிஞர்

தொல்காப்பியன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா!

எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் வெளியிட - கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெற்றுக் கொள்கிறார்!

தஞ்சை, அக்.24- வழக்கறிஞர் சி. ஜெயசந்திரன், சி.பாலசந்திர னின் தந்தை தஞ்சை கவிஞர் தொல்காப்பியன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று (24.10.2026) தஞ்சை இராசப்பா நகர், ராஜ்பேலஸ் திருமண அரங்கில் மாலை 6 மணியளவில் இலக்கியமாமணி முனைவர் இரா. கலியபெருமாள் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் முனைவர் இரா.குணசேகரன் வரவேற்புரையாற்றுகிறார். தென்னங்குடி க. சண்முகசுந்தரம் முன்னிலை வகிக்கிறார்.

முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் நூலினை வெளியிட கவிச்சுடர் கவிதைப்பித்தன் நூலினைப் பெறுகிறார்.

மேலும் இவ்விழாவில் தி.மு.க. கல்வியாளர் அணித் தலைவர் புலவர் செந்தலை ந. கவுதமன் சிறப்புரையாற்றுகிறார்.

பேராசிரியர் ப. திருநாவுக்கரசு, கௌரா பதிப்பகத் தலைவர் கௌராராசசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சி.செயச்சந்திரன் நன்றி கூறுகிறார். விழா ஏற்பாடுகளை தஞ்சை ஞான உதயம் பதிப்பகத்தார் செய்துள்ளனர்.